பக்கங்கள் : நான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 09 வெள்ளிக்கிழமை (23.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 116

# கிழக்கில் மீளக் குடியமர்த்தும் பணிகளில் இருந்து நேற்றிலிருந்து ஐ.நா. அமைப்பு விலகியது!

## உகந்த புறச் சூழ்நிலை உருவாகவில்லை என்று யு.என்.எச்.சி.ஆரின் தலைமை அதிகாரி சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 23

**கிழக்கில் போர் அகதிகளை மீளக் குடியேற்றும் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் இருந்து ஐ.நா.நேற்று வியாழக்கிழமையுடன் விலகிக் கொண்டதாக றொய்ட்டர் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.**

**வாகரை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் அகதிகள் மீளக் குடியேறுவதற்கான உகந்த புறச் சூழ்நிலை உருவாகவில்லை - என்று அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அமைப்பின் (யு.என்.எச்.சி.ஆர்) இலங்கைக்கான தலைமை அதிகாரி அமின் அவாட் நேற்றுத் தெரிவித்தார்.**

வாகரை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் ஏற்கனவே உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களில் - அகதிகளில் - சுமார் பத்தாயிரம் பேர் அரசாங்கத்தினால் இதுவரை மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர்.

மீளக் குடியேற்றத்துக்கான உகந்த புறச் சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை. மக்கள் திரும்பிச் செல்வதற்கான ஆகக் குறைந்த தேவைகளை நிறைவேற்றுவதற்கே இன்னும் எவ்வளவோ பணிகள் செய்யப்பட வேண்டியுள்ளன - என்று அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அமைப்பின் இலங்கையின் தலைமைப் பிரதிநிதி அமிர் அவாட் தெரிவித்திருக்கிறார்.

இந்தவிடயத்தில்எமக்குஈடுபாடுஇல்லை

(03ஆம் பக்கம் பார்க்க)

## மங்களவும், டிரான் அலஸூம் எந்தநேரமும் கைதாகலாம்!

கொழும்பு, மார்ச் 23

அமைச்சர் பதிவியிலிருந்து விலக்கப்பட்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவையும் கைதுசெய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று சில செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மங்கள சமரவீரவுடன் சேர்ந்து அமைச்சர் பதவியை இழந்த மற்றையவரான சிறிபதி சூரியாராய்ச்சி ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளார்.

அதேபோன்ற வலையை மங்கள சமரவீரவுக்கும் விரிப்பதற்கு திட்டங்கள் தயாராகின்றன எனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக - மங்கள சமரவீரவுக்கு எதிராக - குற்றப் புலனாய்வுப் பொலிஸார், வெளிநாட்டவர் ஒருவரின் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

இதேநேரம், மங்களசமரவீரவின் நெருங்கிய ஆதரவாளரான டிரான் அலஸூம் எந்நேரமும் கைதாகலாம் என தெரிவிக்கின்றது.

## ஈழத்தமிழ் அகதிகளுக்கு உடனடியாக இந்தியா உணவு அனுப்ப வேண்டும்

### பாட்டாளி மக்கள் கட்சி ராமதாஸ் வேண்டுகோள்

சென்னை, மார்ச் 23

இலங்கையில் ஒன்றரை லட்சம் தமிழர்கள் பட்டினியால் வாடுகின்றனர். அவர்களுக்கு உடனடியாக உணவு அனுப்ப வேண்டும். அவற்றை கொழும்புத் துறைமுகத்துக்கு அனுப்பாமல் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அனுப்ப வேண்டும். பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் மத்திய அரசை பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் மத்திய அரசை இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் -

இலங்கையில் போரினால் வீடு, வாசல்

(03ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கின் தீர்வு யோசனை தயாராக இன்னும் 2 மாதங்கள் பிடிக்குமாம்

### சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் விதாரண இந்தியா புறப்படமுன்னர் தகவல்

கொழும்பு, மார்ச் 23

**இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தென்னிலங்கைத் தரப்பினால் முன்வைக்கப்படத் திட்டமிடப்பட்டிருக்கும் யோசனையைத் தயாரித்து இறுதி செய்வதற்கு இன்னும் இரண்டு மாதங்கள் பிடிக்கும்.**

**மேற்படி தீர்வுத்திட்ட யோசனையைத் தயாரிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவரான அமைச்சர் திஸ்ஸ விதாரண இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றார்.**

இவ்வார இறுதியில் மூன்று நாள் பயணமாகப் புதுடில்லிக்குப் புறப்படு முன்னர் தாம் வழங்கிய விசேட செவ்வி ஒன்றிலேயே இத்தகவலை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

தாம் ஆட்சிக்கு வந்தால், இனப்பிரச்சினைத்தீர்வு தொடர்பாக தென்னிலங்கையில் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதற்கான பேச்சுகளை மூன்று மாதங்களுக்குள் பூர்த்தி செய்வார் என்று தமது தேர்தல்

(03ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் ஆதரவோடு கருணா குழுவினர் நாடு முழுவதும் கப்பம் வசூலிக்கின்றனர்

### எதிர்க்கட்சி பிரதம கொறடா குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 23

அரச அமைச்சர்கள் சிலரே இன்று பத்துலட்சம், இருபதுலட்சம், ஐம்பதுலட்சம் என கப்பம் கோருகின்றனர். சிறப்புரிமை இருப்பதினால் இந்த அமைச்சர்களின் பெயர்களை இங்கு என்னால் வெளியிடமுடியாது. கருணா குழு அரச அனுக்கிரகத்துடன் இன்று நாடு முழுவதும் கப்பம் கோரிவருவது நாடறிந்த உண்மை.

- இவ்வாறு எதிர்கட்சிப் பிரதம கொரடா ஜோசப் மைக்கல் பெரேரா நேற்று நாடாளுமன்றில் பேசும்போது நேரடியாக அரசைக் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் கூடியது. உள்நாட்டு இறைவரி திருத்தச் சட்டத்தின் மூலம், பொருளாதார சேவை விதிப்பனவு திருத்தச் (03ஆம் பக்கம் பார்க்க)

## பரமேஸ்வரி விடுதலை!

கொழும்பு, மார்ச் 23

அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு சுமார் நான்கு மாதங்களாகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த 'மௌபிம' பத்திரிகையின் செய்தியாளர் பரமேஸ்வரி முனுசாமி, குற்றம் ஏதும் சுமத்தப்படாத நிலையில் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

இவருக்கு எதிரான புலன் விசாரணையின் கோவைகளைப் பரிசீலித்த சட்டமா அதிபர், இவரை விடுவிக்கும்படி பணித்திருக்கிறார் என நேற்று பரமேஸ்வரியை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்த - பயங்கரவாதச் சம்பவங்களை விசாரிக்கும் பொலிஸ் பிரிவின் - அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து பரமேஸ்வரியை விடுதலை செய்ய கொழும்பு பிரதம நீதிவான் குசல சரோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டார்.

கைதுசெய்யப்பட்டு நான்கு மாதங்களாக பொலிஸ் காவலிலும்பின்னர்பூஸாமுகாமிலும் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

## வவுனியாவில் வர்த்தகரும் நண்பரும் செவ்வாய் இரவு சுட்டுக்கொலை

வவுனியா, மார்ச் 23

வவுனியாவில் 46 வயதான வர்த்தகர் ஒருவரும் அவரது நண்பரும் அடையாளம் தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் வவுனியா பொதிசுமக்கும் வீதியிலுள்ள வீட்டுக்கு வெளியே அழைத்து சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர்.

மோட்டார் சைக்களில் வந்த ஆயுதபாணிகளே இக்கொலைகளைப் புரிந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. பொதிசுமக்கும் வீதியில் சிறிய வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வந்தவரான ஞானப்பிரகாசம் ஜோசப் (வயது 46), அவரது நண்பரான வேலாயுதம் கோடீஸ்வரன் (வயது 35) ஆகிய இருவருமே கொல்லப்பட்டனர்.

## வவுனியாவில் படையினர் மீது தாக்குதல்

கொழும்பு, மார்ச் 23

வவுனியா - பூவரசங்குளம் பகுதியில் நேற்றுக்காலை ரோந்துசென்ற படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்திருக்கிறது.

காலை 7.15 மணியளவில் நடந்த இந்தத் தாக்குதலில் புலிகள் சிறிய ஆயுதங்களைப் பயன்படுத்தினர் என்று படையினர் தெரிவித்தனர். தாக்குதல் நடந்த பின்னர் தாமும் பதில்த்தாக்குதல் மேற்கொண்டனர் என்றும், இருப்பினும் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என்றும் படையினர் கூறினர். இந்தத் தாக்குதலின் பின்னர் அந்தப் பகுதியில் பெரும்தேடுதல் இடம்பெற்றது.

## குடாநாட்டின் பல பகுதிகளில் மீன்பிடித்தடை தளர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 23

குடாநாட்டில் பல பகுதிகளில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டுள்ளதாக பலாலி ஊடகத் தகவல் பிரிவு நேற்றிரவு தெரிவித்தது.

மீன்பிடித்தடை நீக்கம் குறித்து அந்தப் பிரிவு தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

★நாவாந்துறை, குருநகர், பாஷையூர் ஆகிய பகுதிகளில் காலை 8மணிமுதல் பிற்பகல் 2மணிவரை மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இனிமேல் மாலை 4மணி வரை மீன்பிடிக்க அனுமதிக்கப்படும்

★குடத்தனை முதல் வல்வெட்டித்துறை வரையான கடல்ப் பகுதியில் ஒரு கிலோ மீற்றருக்கு மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்படும். இந்தப் பகுதியில் மீனவர்கள் கட்டுமரத்தில் மட்டுமே தொழில் செய்ய அனுமதிக்கப்படுவர்.

★அராலி, பாஷையூர், நாவாந்துறைப் பகுதியில் 3 கிலோ மீற்றர் தூரம் வரை களங்கட்டி மீன்பிடித்தலுக்கு அனுமதி வழங்கப்படும்.

இதேவேளை - வடமராட்சிக் கடலில் மீன்பிடிப்பதற்கு படையினர் நேற்று அனுமதித்தனர். இம் மாதம் 16ஆம் திகதி முதல் கடற் பிரதேசத்தில் நிபந்தனைகளுடன் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்ட மீனவர்கள் புதன்கிழமையன்று மீண்டும்தடுக்கப்பட்டிருந்தனர். எனினும்நேற்று மீண்டும் தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். (அ-1-155-111)

## ஊரடங்கு இரவு 8 மணிமுதல் நடைமுறைக்கு வரும்

யாழ்ப்பாணம், மார்ச் 23

குடாநாட்டில் சகல பிரதேசங்களிலும் இரவு 8 மணிக்கு அமுலுக்கு வரும் ஊரடங்குச் சட்டம் அதிகாலை 4 மணிக்கு நீக்கப்படும். பலாலி ஊடகத் தகவல் பிரிவு நேற்றிரவு இதைத் தெரிவித்தது.

நேற்றுமுதல் அமுலுக்கு வந்துள்ள இந்த ஊரடங்கு நேர ஒழுங்கு மறு அறிவித்தல் வரையும் நடைமுறையில் இருக்கும் என்றும் அந்தப் பிரிவு மேலும் தெரிவித்தது. (அ-1)

## கொழும்புக்குத் தென் கிழக்கே நிலநடுக்கம் என அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

இந்து சமுத்திரத்தில் கொழும்புக்கு தென் கிழக்கே 1, 350 கிலோ மீற்றர் தூரத்தில் நேற்று முற்பகல் 11.40 மணியளவில் நில

(03ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி வைகுந்தராஜா தையல்நாயகி

(மண்டைதீவு)

மலர்வு 07.05.1950 — உதிர்வு 25.03.2004

திதி : சதுர்த்தி 23.03.2007

நினைவிலே நிஜமாகி,
நிஜத்திலே நிழலாகி,
மனதிலே மறையாத தாயே - நீர்
விழிமூடிச் சென்று,
மூன்றாண்டுகள் ஆனதம்மா....!
விழிதிறந்து தேடுகின்றோம்,
மீண்டும் வருவீர் என....!

சிவன் கோவில் வீதி,
சாவகச்சேரி. (58966)

கணவர், பிள்ளைகள்,
மருமகன்.

## கண்ணீர் அஞ்சலி



### சின்னத்துரை கனகரத்தினம்

(ஜே.பி.யு.எம்)

(அரச சட்டத்தரணி - யாழ்ப்பாணம், முன்னாள் தலைவர் - வடபிராந்திய போக்குவரத்துச் சபை)

எமது உயர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் ஊக்கம் கொடுத்து
உழைப்பின் மேன்மையை உணர்த்திய உத்தமரின்
மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின்
துயரில் நாமும் பங்கெடுப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

சிவா ரெக்ஸ்ரைல்ஸ்
உரிமையாளரும், ஊழியர்களும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 1927 - 02 - 18 | மறைவு 2007 - 02 - 22

### அமரர் தங்கவேலாயுதம் மங்கையர்க்கரசி

இப்பாரினில் எமைப் பெற்றெடுத்து
பேணி வளர்த்து பெரும் பாடுபட்டு
எமை ஆளாக்கி சீர்கள் பலவும் பெற்று
வாழ வழி வகுத்த எமது அன்னைக்கு
எங்கள் இதய அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

நாளை(24.03.2007) சனிக்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டி நிகழ்விலும் வீட்டுக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சிவபுர வீதி,
வல்வெட்டித்துறை. (58706)

- குடும்பத்தினர்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 01 - 07 - 1920 | இறப்பு 13 - 04 - 2005

### செல்லப்பா சுப்பிரமணியம்

திதி : அபரபட்ச பஞ்சமி

பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
வாழ்க்கைக்கு வழிகாட்டியாய்
செயலில் வீரனாய் - நல்ல
சமூக சேவையாளனாய்த்
திகழ்ந்த எம் தெய்வமே!
எம்மைப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவு என்றும் எங்களுடன்...

வீரபத்திரர் கோயிலடி,
மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.


## புதிய பிரிவுகள் ஆரம்பம்
24.03.2007 Saturday

- Diploma in Microsoft Office
- Diploma in Desktop Publishing
- Diploma in Computerized Accounting
- Diploma in Programming Languages
- Diploma in Computer Hardware
- Diploma in AutoCAD
- Diploma in Web Designing
- Diploma in GIT (G.C.E A/L)
- Certificate in ICT (Grade-10)
- Diploma in ICT (Grade-11)
- Certificate in Internet & E-Mail
- Advanced Certificate in IT for Banking & Finance (for ACBF Candidates)

மேலதிக விபரங்களுக்கு நேரில்!

CB Computer Academy
Station Road, Kondavil. ☎:- 021-4590291


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### வேலாயுதம் நல்லையா

தோற்றம் 05.03.1927 — மறைவு 03.04.2006

திதி: பஞ்சமி 23.03.2007 வெள்ளிக்கிழமை

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
திகழ்ந்து அன்பாலும் பண்பாலும்
உயர்ந்து நின்று வறுமையிலும்
செம்மையாய் எம்மை ஆளாக்கி
வளர்த்து நல்வழி நடத்திய அப்பாவே!
ஓராண்டு சென்றாலும் உம்மை நாம் மறவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள்.

கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (58930)

## தவறிவிட்டது

சின்னையா கணபதிப்பிள்ளை என்பவரது தே.அ.அ. இல.(581003838v) மற்றும் கணபதிப்பிள்ளை ருபராணி என்பவரது தே.அ.அ. இல. (606561377v), விசேட அ.அட்டையும் யாழ். பஸ்நிலையத்தில் 20.03.2007 செவ்வாய்க்கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிடும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

S.யோகராசா,
'ரூபம்', வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

## விற்பனைக்கு

நல்ல நிலையில்
உள்ள
Herostream
49 cc
மோட்டார் சைக்கிள்
விற்பனைக்குண்டு
(Maroon Colour)
தொடர்பு:
021 226 3061

## தேவை

நல்ல நிலையில்
உள்ள
Disc antenna
(சிறியது)
தேவை.
தொடர்பு:
021 226 3061

## வீடு காணி விற்பனைக்கு

மானிப்பாய் கட்டுடையில் எல்லா வசதியும் கொண்ட ஆறு அறைவீடும் அதனோடு சேர்ந்த ஆறு பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. நேரில் தொடர்பு கொள்ளவும்.

சுந்தரையா இலட்சுமணன்
சமாதான நீதிவான்,
[illegible]
கட்டுடை, மானிப்பாய்.


## COMPUTER EXPRESS
Institute of Information Technology
Head Office : 15, Sirambiyadi Lane, Off Stanly Rd, Jaffna.
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna.
TP No : 021 222 8250 , 0777 222 422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007

80% OFF

| பாட நெறிகள் | | | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | [illegible] | 1,650 |
| Honours Diploma in Computer Science | - 5மாதம் | [illegible] | 2,100 |
| Diploma in Web Page Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | [illegible] | 1,450 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| Accounting Package | - 3 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| MS Office | - 3 மாதம் | [illegible] | 1,000 |

50% Off Advance Courses
Diploma in Video Editing [illegible] 3250
Diploma in Multimedia [illegible] 2750

வகுப்புக்கள் ஆரம்பம் :-
Batch I - 23/03/2007
Batch II - 24/03/2007
Batch III - 25/03/2007
Batch IV - 28/03/2007

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 29 ★ 04 ★ 1932 | மறைவு 21 ★ 02 ★ 2007

### அமரர் சண்முகம் குலசிங்கம்

(ஓய்வுபெற்ற வனபரிபாலன உத்தியோகத்தர்)

கடந்த 21.02.2007 அன்று எமது குடும்பத்தலைவர் சிவபதமடைந்த செய்தியறிந்து சகல வழிகளிலும் எமது துயரைப்பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (23.03.2007) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி!

வரியப்புலம்,
மல்லாகம். (58930)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 19 - 04 - 1925 | மறைவு 03 - 04 - 2006

### திருமதி ஆறுமுகம் கனகம்மா

திதி: 23.03.2007

அன்போடும் பண்போடும் அறிவோடும்
வளர்த்த எமதருமை அம்மாவே!
நீங்கள் அருகிருந்து எமக்கு நல்வாழ்வு
தந்தீர்கள் - இப்போது
மறைந்திருந்தும் உங்கள் ஆசியுடன்
எமை வாழ வைத்தீர்கள்
உமை என்றும் மறவோம் அம்மா!

107, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
அன்பு பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## கொழும்பு அரசின் கீர்த்தி சர்வதேச ரீதியில் அம்பலம்

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் மஹிந்தர் அரசின் 'கீர்த்தி' தினசரி கொடிகட்டிப் பறக்கும் விதத்தில் அம்பலமாகிக்கொண்டிருக்கின்றது.

சர்வதேச மன்னிப்புச் சபை, அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸில், சிறுபான்மையினரின் உரிமைகளைக் கண்காணிப்பதற்கான சர்வதேச அமையம், அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் என்று பல்வேறு சர்வதேச அமைப்புகள் இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கவலை தெரிவித்து வெளியிடும் அறிக்கைகளும், அறிவிப்புகளும் நாளொரு வண்ணமும் பொழுதொருமேனியுமாக வெளிவந்து, மஹிந்தர் அரசின் 'மகத்துவத்தை' சர்வதேச ரீதியில் அம்பலப்படுத்தி வருகின்றன.

இந்த வரிசையில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், கிழக்கில் அகதிகள் மீளக் குடியமரும் விடயம் தொடர்பாக உள்நாட்டில் இயங்கும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்த சுற்றறிக்கையின் சாராம்சம் நேற்று அம்பலமாகியிருக்கின்றது.

இந்தச் சுற்றறிக்கையில் -

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இடம்பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து தன்னை விலக்கிக்கொண்டிருப்பதை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வெளிப்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்த அகதிகளை மீளக்குடியமர்த்துவது தொடர்பான விடயத்தில் சில சர்வதேச நடைமுறைகள், பொதுவான விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது ஐ. நாவினாலும் ஏனைய சர்வதேச அமைப்புகளினாலும் வகுக்கப்பட்ட நெறியாகும்.

இடம்பெயர்ந்த அகதிகள் மீளவும் தங்கள் சொந்த இடங்களில் குடியேற வேண்டுமானால் அது அவர்களின் சுயவிருப்பின்பேரில் - பலவந்தம் ஏதும் பிரயோகிக்கப்படாத நிலையில் - அவர்களுக்குரிய கௌரவத்தோடு - முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே சர்வதேச மட்டத்தில் எதிர்பார்க்கப்படும் முக்கிய நடைமுறையாகும்.

கிழக்கில் அண்மைக்காலப் படை நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தஞ்சம் புகுந்திருக்கும் சுமார் ஒன்றரை லட்சம் தமிழ் அகதிகள் விடயத்திலும் இதே - சர்வதேச ரீதியான - நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என்றே ஐ. நா. அமைப்புகளும் ஏனைய சர்வதேச அரச சார்பற்ற தொண்டர் அமைப்புகளும் எதிர்பார்க்கின்றன.

ஆனால், இதற்கு மாறாக கிழக்கில் ஆயிரக்கணக்கான அகதிகள் தத்தமது இடங்களில் மீளக்குடியேற்றப்படுவதற்காக அண்மையில் பலவந்தமாகக் கூட்டிச் செல்லப்பட்டமை குறித்து பல்வேறு செய்திகள் வெளிவந்தமையும், அது குறித்து இப்பத்தியிலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தமையும் தெரிந்தவையே.

இங்கொன்றும், அங்கொன்றுமாக இடம்பெற்ற சம்பவங்கள் அவை என்றும், இனி அத்தகைய சம்பவங்கள் இடம்பெறா என்றும் இலங்கை அரசுத்தரப்பில் சமாதானம் கூறப்பட்டது.

ஆனால் அந்தச் சமாதானம், செயற்பாட்டளவில் நடைமுறைக்கு வரவில்லை என்பதை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் பிந்திய சுற்றறிக்கை நிரூபித்திருக்கின்றது.

கிழக்கில் மிகக் கோரமான - கொடுமையான - படு பயங்கரமான - வகையில் இராணுவத் தாக்குதல்களை நடத்தி, அதன்மூலம் பல்லாயிரக்கணக்கில் தமிழர்களை அவர்களின் பூர்வீக வாழ்விடங்களில் இருந்து பலவந்தமாக வெளியேற்றி, இடம்பெயர வைக்கும் இலங்கை அரசுத்தரப்பு, அதே வேகத்தில் - அதே மாதிரி - பலவந்தமாக அந்த மக்களை மீளக் குடியமர்த்தவும் முயல்கிறது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குற்றம் சுமத்தி வருகின்றது. அதை உறுதிப்படுத்துமாற்போல அகதிகளுக்கான ஐ. நா. தூதரக சுற்றறிக்கை அமைந்துள்ளது.

அரசுத் தரப்பு பலவந்தமாக மேற்கொள்ளும் மீளக்குடியமர்த்தும் நடவடிக்கையோடு இணைந்து செயற்படுவதன்மூலம், அந்த நடவடிக்கையை நியாயப்படுத்தவும், அதற்கு சட்டரீதியான அந்தஸ்து வழங்கவும் தான் தயாரில்லை என்பதைக் குறிப்பிட்டுள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், அதன் காரணமாக, ஏற்கனவே கிழக்கில் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளில் இருந்து தன்னை விலக்கிக்கொள்வதாக தனது பிந்திய அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

அரசுப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் புதிதாக வந்திருக்கும் தமது பூர்வீக இடங்களுக்குத் தாங்கள் திரும்பி, மீளக் குடியமர்ந்தால், அரசுப் படைகளுடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுக்குழுக்கள், துணைப்படைகள் போன்றவற்றின் அச்சுறுத்தலுக்கும், தொந்தரவுகளுக்கும், தொல்லைகளுக்கும், கப்பம் கோரல்களுக்கும் தாங்கள் ஆளாக வேண்டி நேரும் என்ற அச்சமே, இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர விடாமல் பீதிக்குள்ளாக்கி வரும் அடிப்படை விடயம் என்பதும் இப்போது வெளியே தெரியவந்திருக்கின்றது.

மனித உரிமைகளைப் பேணும் விவகாரத்தில் மஹிந்தர் அரசின் பெயர் சர்வதேச ரீதியில் தொடர்ந்து மோசமாகக் கெட்டு வருகின்றது. அரசுத் தலைமை இவ்விடயம் குறித்து அதிக சிரத்தை காட்டுவதாகத் தெரியவில்லை. அதனைவிட இராணுவ நடவடிக்கைகளிலும் யுத்த வெற்றிகளிலும் கொழும்பு அதிக முனைப்புக் காட்டுகின்றது. இதன் விளைவு கொழும்பு அரசுக்கு எதிராக சர்வதேச ரீதியில் விபரீதங்களை ஏற்படுத்தும் என்பதை அது புரிந்து கொள்ளாமல் - புரிய எத்தனிக்காமல் - இருப்பது மிகவும் விந்தையானது.

# மண்டான் பகுதியில் அடிகாயங்களுடன் மீட்கப்பட்ட குடும்பஸ்தர் நீதிமன்றில்

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடமராட்சியில், மண்டான் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் அடிகாயங்களுக்குள்ளாகி மயக்கமடைந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டார். பின்னர் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

அதேஇடத்தைச் சேர்ந்த தம்பித்துரை சுபாஸ்கரன் (வயது-28) என்பவரே மீட்கப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணியளவில் அவரது வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாதவர்கள் அவரைக் கூட்டிச் சென்றனர் என்றும்-

பின்னர் அடிகாயங்களுடன் வீட்டுக்கு அருகில் உள்ள பற்றைக்குள்ளிருந்து அவர் மீட்கப்பட்டார் என்றும்- தெரிவிக்கப்பட்டது.

இத்தகவல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் சம்பவ இடத்திற்குச் சென்று, அவரை மீட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

யாழ்.சிறைச்சாலையில் அவரைத் தங்க பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டார். சிறைச்சாலைக் காவலரின் பாதுகாப்புடன் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்று சிகிச்சைக்குட்படுத்துமாறும் அவர் பணித்தார். (அ-1-4)

## நகரப் பகுதியில் நேற்று இளம் பெண் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,மார்ச் 23

யாழ்.நகரப் பகுதியில் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள தனியார் மருந்தகம் ஒன்றில் வைத்து நேற்றுக்காலை யுவதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கைதடி தெற்கைச் சேர்ந்த கதிரன் உதயயொகிகா (வயது 27) என்ற பெண்ணே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்றுக் காலை 9.45 மணியளவில் நகரப் பகுதியில் சன நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்ட வேளையில் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

பிரஸ்தாப யுவதி மருந்தகத்தினுள் கடமையில் இருந்தவேளை உள்ளே நுழைந்த இனந்தெரியாத ஒருவர், கைத்துப்பாக்கியால் யுவதியை சரமாரியாகச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுடப்பட்ட இடத்திலேயே யுவதி மரணமானார்.

கொலையாளிகள் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் தப்பிச் சென்றதாக சம்பவத்தை நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா விசாரணைகளை மேற்கொண்டார்.

விசாரணைகளின் பின்னர் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (8-4-75-51-78)

## கொழும்புக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடுக்கம் ஏற்பட்டது. இலங்கை வளிமண்டலத் திணைக்களம் இத்தகவலை அறிவித்துள்ளது.

நிலநடுக்கம் 5.8 ரிச்சர்ட் அளவில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பசிபிக் ஆழிப் பேரலை எச்சரிக்கை மையத்துடன் தொடர்பு கொண்டபோது, ஆழிப் பேரலைத் தாக்கம் இல்லை என உறுதியளிக்கப்பட்டதாகவும் வளிமண்டலத் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

## கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அர்த்தமில்லை. ஆனால், தங்களுடைய மீளத்திரும்புதலுக்கு - மீள்குடியேற்றத்துக்கு - நாம் அனுசரணை வழங்குகிறோம் என்றோ ஊக்குவிக்கின்றோம் என்றோ அகதிகள் கருதுவதற்கு இடமளிக்க விரும்பவில்லை. அவர்களுக்கு தகவல்களை அறியும் உரிமை உண்டு. அகதிகளுக்குவிருப்பமில்லையேல் மீளக்குடியேறுவதற்கு மறுப்பதற்கு உரிமை உண்டு -

'அகதிகளின் பாதுகாப்பு, கண்ணிவெடிகள் அகற்றல், சக்தி இழக்காத வெடிபொருட்கள், ஆயுதங்களை மீட்டல், தகுந்த தங்குமிட வசதி, போதிய உணவுக் கையிருப்பு, அடிப்படைச் சுகாதார வசதிகள் மற்றும் நிவாரணப் பொருள்களின் கையிருப்பு ஆகியவை மீள்குடியேற்றத்துக்கு ஆகக் குறைந்த தேவைகளாகும் -

கிழக்குப் பிராந்தியத்தில் இதுவரை இடம்பெயர்ந்த 155,000 தொடக்கம் 165,000 வரையான அகதிகள் மத்தியில் அவர்களுக்குரிய உரிமைகள் எவை என்பதை எமது அலுவலர்கள் இப்போது விளக்கமளித்து வருகிறார்கள் - இப்படி அமின் அவாட் தெரிவித்தார்.

அதேவேளை -

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தற் போது தங்கியுள்ள மக்கள், தமது சொந்த இடங்களுக்கு இப்போது செல்வதற்கு விரும்பவில்லை என்று றொய்ட்டருக்கு தெரிவித்துள்ளனர்.

**அரச அதிகாரிகள் பயமுறுத்தல்**

தம்மை அங்கு செல்லுமாறு அரசாங்க அதிகாரிகள் வற்புறுத்தி வருவதாகவும், அவ்வாறு திரும்பச் செல்லாது இங்கு தங்கியிருந்தால் இப்போது வழங்கப்படும் உணவு மற்றும் குடிதண்ணீர் வசதிகளை நிறுத்திவிடப்போவதாகவும் பயமுறுத்துகிறார்கள் - என்றும் மக்கள் றொய்ட்டருக்குத் தெரிவித்தனர்.(அ)

## அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட மூலம் ஆகியவற்றின் மீதான விவாதத்தில் அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

சில அமைச்சர்களின் வாகனங்கள் லட்சக்கணக்கில் கப்பம் பெறுவதற்காகப் பாவிக்கப்படுகின்றன. கருணா குழுவினருக்கு அரச அனுக்கிரகம் இருக்கின்றது. அரச அனுக்கிரகத்துடன் கருணா குழுவினர் நாடு முழுவது முள்ள தமிழ் வர்த்தகர்கள் மற்றும் தனவந்தர்களிடம் லட்சக்கணக்கில் கப்பம் வசூலித்து வருகின்றனர்.

அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், எம்.பிக்களுக்கு பாதுகாப்புக்கென 'பிக் - அப்' வாகனம் வழங்கப்படுவது வழக்கம். இது குறித்து நாம் விசாரிக்கவில்லை. இருந்தும் இந்த வாகனங்களை அமைச்சர்கள், எம்பிக்களின் ஆதரவாளர்களுக்கும், அடிவருடிகளுக்கும் பாவிக்க இடமளிக்கக் கூடாது. இதுபோன்ற வாகனங்களே கப்பம் பெறுவதற்குப் பாவிக்கப்படுகின்றன - என்றார். (அ-சி)

## ஈழத் தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை விட்டு விட்டு மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழர்கள் ஒன்றரை லட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் பட்டினிச் சாவின் விளிம்பில் உள்ளனர். அவர்களைக் காப்பாற்ற உடனடியாக உணவுப் பொருட்களையும், முக்கிய மருந்துப் பொருட்களையும் அவசரமாக உலக நாடுகள் வழங்கவேண்டும் என்று ஐக்கிய நாடுகள்சபையின் உலகஉணவுத்திட்ட அமைப்பின் ஆசியப்பகுதித்தலைவர் ரொனி பான்பொரி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

உலகின் பிற நாடுகள் உதவிக்கரம் நீட்டுவதற்கு முன்னர் இந்தியா உடனடியாக உணவுப் பொருட்களையும், மருந்துப் பொருட்களையும் அனுப்பிவைக்க வேண்டும். சில மாதங்களுக்கு முன்பு இதேபோன்ற நிலைமை உருவானபோது இந்திய அரசு உணவுப் பொருட்களையும், மருந்துப் பொருட்களையும் அனுப்பி வைத்தது. ஆனால் அது பட்டினியில் வாழும் ஈழத் தமிழர்களுக்குப் போய்ச்சேரவில்லை. இந்தியா வழங்கிய அத்தியாவசியப் பொருட்கள் கொழும்பு துறைமுகம்வழியாகஅனுப்பிவைக்கப்பட்டமை தான் காரணம்.

**காங்கேசனுக்கு அனுப்ப வேண்டும்**

எனவே, இந்த முறை இந்தியா உணவுப் பொருட்களையும், மருந்துப் பொருட்களையும் நேரடியாக காங்கேசன்துறை முகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். தமிழீழப் பகுதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் ஐக்கிய நாடுகள் சபையின் உலகஉணவுத்திட்ட அமைப்பிடம் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்பார்வை யில் உணவுப் பொருட்களைவழங்க வேண்டும் - என்று வற்புறுத்தப்பட்டுள்ளது.

## தெற்கின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞாபனத்தில்வாக்குறுதி அளித்தே 2005நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டினார்.

ஆனால்அவர்ஆட்சிக்குவந்துபதினாறு மாதங்கள் கடந்துவிட்டன. தெற்கில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பேச்சுகள் - மாநாடுகள் - கலந்துரையாடல்கள் - இன்னும்பூர்த்தியாகவில்லை.அவை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

அனைத்து அரசியல் கட்சிப் பிரதிநிதி கள் குழுவின் தீர்வு யோசனை பெப்ரவரி யில் தயாராகியிருக்கவேண்டும், ஆனால் ஆளும் ஸ்ரீல.சு.கட்சி தனது யோசனைகளைச் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தால் அதுவும் தாமதமாகி விட்டது என மேற்படி செவ்வியில் திஸ்ஸ விதாரண தெரிவித்திருக்கின்றார்.

''ஸ்ரீல. சு.கட்சியின் யோசனைகள் அடுத்தவார முற்பகுதியில் எனது கைக்குக் கிடைக்கும் என நான் எதிர்பார்க்கிறேன். பின்னர் ஜாதிக ஹெல உறுமய, இ. தொ. கா. ஆகியவற்றின் திருத்தங்களும் தொடரும் என எதிர்பார்க்கிறேன்.

''அதன்பின்புதிருத்தங்கள் ஒவ்வொன்றும், ஒன்றன்பின் ஒன்றாக - ஷரத்துக்களாக - பரிசீலிக்கப்படும்.

''இணக்கப்பாட்டுக்கு வரும் இந்த முயற்சியில் 13 கட்சிகள் ஈடுபட்டுள்ளன. அனைவரும் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் ஒரு முடிவுக்கு வரும் என்பதை நான் கோடி காட்டுகிறேன்.' - என்று விதாரண மேலும் தெரிவித்தார். (உ)

**நாளை**

பங்குனி - 10
சனிக்கிழமை
24.03.2007
திதி: சஷ்டி
முன்னிரவு : 07.51
நட்சத்திரம்: ரோகிணி
[illegible]
[illegible]
சுபநேரம் : 03.16 - 04.46
ராகுகாலம் : 09.16 - 10.46

## சட்டநாதர் வீதியில் துப்பாக்கிதாரிகள் நேற்றிரவு கொள்ளை

யாழ்ப்பாணம், மார்ச் 23

நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் நேற்றிரவு 8.30 மணிக்கு நுழைந்த கொள்ளையர்கள் ஆயுதமுனையில் பெறுமதியான நகைகளையும் மற்றும் பணத்தையும் சூறையாடிச் சென்றனர்.

பிஸ்ரல் மற்றும் துப்பாக்கிகளுடன் வீட்டிற்குள் நுழைந்த கொள்ளையர்கள் அங்கு இருந்தவர்களை அச்சுறுத்திவிட்டு கொள்ளையை நடத்தியுள்ளனர். வீட்டுக்காரர்களை சத்தம் போடக் கூடாதென்றும் எச்சரித்து விட்டு சில நிமிட நேரங்களில் பணத்தையும் நகைகளையும் சூறையாடிச் சென்றதாகச் சொல்லப்படுகிறது.

கொள்ளையிடப்பட்ட நகைகளின் பெறுமதி மட்டும் சுமார் இரண்டு லட்சம் ரூபா என்று கூறப்பட்டது. (அ-1)

## சுழிபுரத்தில் நேற்று பதற்ற நிலை

சங்கானை, மார்ச் 23

சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரிக்குச் சமீபமாக அமைந்துள்ள காவலரண் எரிக்கப்பட்டதால் அப்பகுதியில் நேற்றுப் பதற்ற நிலை தோன்றியது.

குறிப்பிட்ட காவலரணில் பணியாற்றிய படையினர் அங்கிருந்து விலகிச் சென்றதை அடுத்து புதன்கிழமை காவலரண் இனந்தெரியாதவர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

நேற்று அங்கு திரும்பிய படையினர் பொதுமக்களை இது குறித்து விசாரித்தனர். சிலர் தாக்குதலுக்கு உள்ளாகினர். இதனால் அப்பகுதியில் நேற்றுப் பதற்றம் நிலவியது.

காவலரணை மீண்டும் அமைக்கும் பணியில் படையினர் நேற்று ஈடுபட்டிருந்ததைக் காணமுடிந்தது. (அ-1-4-29)

## பதவி உயர்வுப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 23

முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு IIக்குத் தரமுயர்த்தும் பரீட்சைக்கான விண்ணப்பங்களை அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக் கோரியுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை 'உதயன்' அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். (அ-1)


UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
VACANCIES - FACULTY OF AGRICULTURE

University of Jaffna will entertain application from suitable qualified persons for the under mentioned posts.

Faculty of Agriculture

**Senior Professor/Professor in**
Agricultural Biology/Agricultural Chemistry/Agronomy/Agricultural Economics
**Assistant Lecturer (on contract) in**
Agronomy/Agricultural Biology/Agricultural Chemistry/Animal Science/Agricultural Economics/Agrucultural Engineering
**Demonstrator (on contract) in**
Agronomy/Agricultural Biology/Agricultural Chemistry/Animal Science/Agricultural Economics/Agrucultural Engineering

| Post | Salary |
|---|---|
| Senior Professor | Rs.57,755-11x900-67,655/-p.m. |
| Professor | Rs.50,905-13x850-61,955/-p.m. |
| Assistant Lecturer (on contract) | Rs.25,145/-p.m. (fixed) |
| Demonstrator (on contract) | Rs.20,755/-p.m. (fixed) |

Other allowances approved by University Grants Commission will also be paid.

**Statutory benifits**
**Post of Senior Professor / Professor**
i. Sabbatical leave entitlement.
ii. Membership in University Provident Fund and Pension Scheme in the Univesity System.
iii. Gratuity Payments
iv. Employees' Trust Fund benifits
v. Free Medical Services

**Closing Date :**
Post of Senior Professor / Professor - 19.06.2007
Other Posts - 27.03.2007

Appliction for the post of Senior Professor should be accompanied by the following in accordance with the University Grants Commission Circulat No:838 dated 26.01.2004
i. The Curriculum Vitae
ii. A self assessment, as per the marking scheme, the applicants contribution to the following areas after the applicant became a professor:
- Teaching and academic development
- Research and creative works
- Dissemination of knowledge and
- University & National Development

Application for the post of Professor should be accompanied by the following in accordance with the University Grants Commission cirucular No.869 dated 30.11.2005.
i. The Curriculum Vitae
ii. A Self assessment, as per the marking scheme of applicants whole career specifying contrubutions to
- Teaching and academic development
- Research and creative works and
- Dissemination of knowledge and
- University & National Development
iii. Three copies of the publication, research papers and other relevan documents.
iv. Title of five outstanding research papers / Publications

Applications and other document shall be sent to the Vice - Chancellor with a covering letter. Applications for the other posts shall be sent to the senior Assistant Registrar (Eatablishements).

Application forms and other details may be obtained from the office of the senior Assistant Registrar / Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by posts are requested to send a Money Order / Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - **addressed stamped envelope 23x10c.m. in size.**

Those who wish to apply **for more than one post** should make **seperate applications.**

Applicants from the University System / Government Department / Corporations and Statutory Board should channel their application through the Heads of respective Institution Application received after the closing date will be rejected without intimation. Only those applicants who possess the qualifications and experience for consideration will be called for an interview.

19.03.2007 REGISTRAR.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்தத் திருக்குளிர்த்தி விழா

மேற்படி ஆலயத்தின் வருடாந்தக் குளிர்த்தி விழா எதிர்வரும் பங்குனி மாதம் 12ஆம் நாள் (26.03.2007) திங்கட்கிழமை வழமைபோல் சிறப்பாக நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அடியார்கள் அத்தருணம் ஆலயத்துக்கு வருகை தந்து விழாவைச் சிறப்பித்து அன்னை அருள் பெற்றேகுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னதானத்துக்குத் தேவையான பொருள்கள், பால், பழம், அபிஷேகப் பொருள்களை முதல் நாளே ஆலயத்தில் கொடுத்து விழாவைச் சிறப்பிக்குமாறு அடியார்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

தவளக்கிரி. (58933) பரிபாலன சபையினர்.

## நன்றி நவில்கின்றோம்

### அமரர் பரந்தாமன் பிருந்தாபன்

(சிரேஷ்ட பதவிநிலை அலுவலர் நிதிக்கிளை,யாழ்.பல்கலைக்கழகம்)



12.03.2007 அன்று மாலை சற்றேனும் எதிர்பாரா வகையில் எமைவிட்டு அமரரான எமது குடும்பத் தலைவர் பரந்தாமன் பிருந்தாபன் அவர்கள் மயக்கமுற்று இயற்கையெய்திய வேளை, தகவல் அறிந்து விரைந்து செயற்பட்டு அன்னாரை வைத்திய சாலைக்கு கொண்டு செல்வதற்கு உதவிய அன்புள்ளங்களுக்கும், வைத்தியசாலையிலிருந்து அகால வேளையாயிருந்தும் உடலை எமது இல்லத்திற்கு தாமதமெதுவுமின்றி கொண்டு வருவதற்குப் பேருதவி நல்கிய யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி உயர்திரு. இ.விக்னராசா, யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர், நிதியாளர், வைத்திய கலாநிதிகள், உத்தியோகத்தர்கள், அன்பர்களுக்கும்-

நாம் சந்தித்த ஈடுசெய்ய முடியா பேரிழப்பினால் கலங்கித்துவண்ட வேளை விரைந்து வந்து எமது துயரில் முழுமையாகப் பங்குகொண்டு ஆறுதல் வார்த்தைகள் கூறி எமைத் தேறுதலடைய உதவிய அன்புடையோர்களுக்கும், தபால், தந்தி, தொலைபேசி ஊடாக அனுதாபங்களைத் தெரிவித்தோர்க்கும் மலர்வளையங்கள், மலர் மாலைகள் சாற்றியும், அஞ்சலி உரைகள் ஆற்றியும், இறுதிக்கிரியைகளிலும், இறுதி யாத்திரையிலும் கலந்துகொண்டோருக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் மேலும் அனைத்து நடவடிக்கைகளையும் குறிப்பறிந்து மிகத்திறமையான வழிவகைகளில் ஆற்றியுதவிய அன்பு இதயங்களுக்கும் உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிமறவா நன்றியினைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"எந்நன்றி கொன்றார்க் குய்வுண்டாம் - உய்வில்லைச் செய்நன்றி கொன்ற மகற்கு"

இல. 393/47, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (58993) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிப்பிள்ளை பற்றிக் இம்மானுவேல்

(ஓய்வுபெற்ற வரி மதிப்பாளர்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் 100/3, மவுண்ட்கார்மல் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பற்றிக் இம்மானுவேல் நேற்று (22.03.2007) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - லூயிஸ்மேரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பேதுறுப்பிள்ளை - தங்கரட்ணம் தம்பதியரின் அன்பு மருமகனும் பெர்னடேற் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் தியடோர் (தாதிய உத்தியோகத்தர், வவுனியா), அனிற்றா லொறற் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஏ.எம்.யோசெப் (ஓய்வுபெற்ற நகராட்சி மன்ற செயலாளர், வல்வெட்டித்துறை), அல்பிறட் வில்லியம் (கனடா), யேசுதாசன் ஜெயசிங்கம் (நெதர்லாந்து), காலஞ்சென்ற மேரி லொறற் ஞானரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் யூலியற் (நெதர்லாந்து), நேசரட்ணதேவி (பிரதி அதிபர், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் செல்வறூபியின் (தாதிய உத்தியோகத்தர், வவுனியா) அன்பு மாமனும் விதுர்ஷன், அக்ஷயன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை 24.03.2007 சனிக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்செஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

100/3, மவுண்ட் கார்மல் வீதி,
யாழ்ப்பாணம்.
077 9773108, 0779184650, 077 6151026. (சி/50845)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரன்.

### சிவஞானசுந்தரம் பாலசறோசினி

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானசுந்தரம் பாலசறோசினி நேற்று( 22.03.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற சிவஞானசுந்தரத்தின் மனைவியும் சந்திரா, சிறிஸ்கந்தராசா ஆகியோ ரின் சகோதரியும் அமரர் சிவரஞ்சன், திருமதி ப.வினோதினி, சுபாஜினி ஆகியோரின் தாயும் தாரணி, பார்த்தீபன் (S.D.O.), தர்சினி (P.A.), தர்மசீலன் (அக்ரே சென்ரர், பண்டத்தரிப்பு) ஆகியோரின் பெரிய தாயும் திருமதி பி.சிறிகுமாரி, சிறிக்குமார் மற்றும் க.பரமநாதன் ஆகியோரின் மாமியும் அனுசாவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.03.2007)வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் விழாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
வடலியடைப்பு

தகவல்:
சிறிஸ்கந்தராசா (சகோதரன்),
த.பார்த்தீபன் (பேரன்)

கிறிஸ்தவ சமய சமூக ஆய்வு மன்றம்

## கருத்தரங்கும் நூல் வெளியீடும்

★காலம்
முற்பகல் 9.30 மணி
சனிக்கிழமை 24.03.2007

★இடம்
யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். வைத்தியசாலை முன்பாக)
(பேராயர் குலேந்திரன் ஞாபகார்த்த மண்டபம்)

★ஆசியுரை
அதி.வண. கலாநிதி எஸ்.ஜெபநேசன்
முன்னாள் பேராயர் தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனம்

நூல் வெளியீடும் ஆய்வுரையும்
CHIRISTIAN HERITAGE OF JAFFNA-SRILANKA
WORK OF THE AMERICAN MISSIONARIES
BY
Samuel Thevablan Arnold
அதி.வண. பேராயர் கலாநிதி D.S.தியாகராஜா
தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனம்

★கருத்துரை
பேராசியர் எஸ். சிவலிங்கராஜா
தலைவர் தமிழ்த்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

தலைப்பு
யாழ். கிறிஸ்தவ பாரம்பரியத்தில் அமெரிக்க மிசனரிமாரின் பங்களிப்பு.

★C.I.S.R.S. ஆய்வரங்குக் கட்டுரைகளின் தொகுப்பு வழங்கலும், நன்றியுரையும்
வண.G.நடராஜா
இயக்குநர் C.I.S.R.S

(58987) C.I.S.R.S நிறுவனத்தினர்.


அளவையியல் (Logic)
2007-பகுதி II (விஞ்ஞானமுறை), 2008 - குறியீட்டு அளவையியல்
2009- அளவையியல் பற்றிய அறிமுகம்
2007⇒ PAPER CLASS
ஆசிரியர் by M.KAJEN ஆரம்பம் 24.03.2007 காலை 10 a.m
ஐடியல் இன்ஸ்ரிரியூட் ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்.

தேசிய பாடசாலை / மாகாணப் பாடசாலை } ஆசிரியர் தெரிவு
பரீட்சைகளுக்கான வகுப்புகள்
D.M.I, யாழ். சனி, ஞாயிறு 11-2 மணி
Subra, சித்தன்கேணி ஞாயிறு,புதன் 4.00-5.30

விற்பனைக்கு
A4 போட்டோ கொப்பி பேப்பர் மற்றும் பக்ஸ் றோல் என்பன விற்பனைக் குண்டு.
தொடர்பு: 021 222 5392


## திருத்தி வாசிக்கவும்

21.03.2007 புதன்கிழமை உதயனின் 2ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய சிவக்கொழுந்து மங்கையர்க்கரசி அவர்களின் மரண அறிவித்தலில் மருமகளான குலனேஸ்வரியின் பெயர் நகுலேஸ்வரியெனத் தவறுதலாக வெளிவந்துவிட்டது. அதனை திருத்தி வாசிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(58986) - குடும்பத்தினர்.


இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு
பிருந்தாவன் கல்லூரி
பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது
கல்வி நெறிகள்
B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.
அரசாங்க அங்கீகாரம் (சர்வதேச) [illegible]
பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன
Company Secretarial Services(Pvt.)Ltd.
285C-1/1 Stanley Tillakaratne Mawatha, Nugegoda.
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இலக்கம் - 0777 317043


## மரண அறிவித்தல்

### கதிரன் உதயயோகிதா (யோகி)

கைதடி தெற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிரன் உதயயோகிதா நேற்று அகாலமரணமானார்.

அன்னார் கதிரன் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் உதயயுனிதா, உதயரதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சதீஸ்வரனின் அன்பு மைத்துனியும் திபிகாவின் அன்புச் சித்தியும் மார்க்கண்டு, இராஜேந்திரம், தேவராஜா, யோகேஸ்வரன், லிங்கம் ஆகியோரின் மருமகளும் இராசதுரை, லலிதா ஆகியோரின் பெறாமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் ஐவினைப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை உப அதிபர் திருமதி யுதிஸ்டராணி ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் அன்புத் தந்தை

### தில்லையம்பலம் இராசையா

அவர்கள் 19.03.2007 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கலாநிதி ஆ.தியாகராசா
மத்திய மகா வித்தியாலயம்,
காரைநகர்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
ஊழியர்கள். (58975)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

### கந்தையா சுந்தரம்

(எழுதுமட்டுவாழ் விழுபளை கண்ணகை அம்மன் தர்மகர்த்தா, குடும்பத் தலைவர்)

தோற்றம்
14.03.1923

மறைவு
21.02.2007

எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (23.03.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொன்னர் லேன்,
கண்டி வீதி, மீசாலை. (58979) குடும்பத்தினர்.

## எமது அன்பு அப்பாவின் ஓயாத நினைவலைகள் - ஏழாம் ஆண்டு

மண்ணுலகு
25 ★ 07 ★ 1934



விண்ணுலகு
10 ★ 03 ★ 2000

### அமரர் சிவக்கொழுந்து சீனிவாசகம்

நிலையில்லா இவ்வுலகத்திலே நீங்காத நினைவை மட்டும் எமக்கு விட்டுச்சென்று ஏழு ஆண்டுகள் நிறைவுறும் வேளையிலே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

62, புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (58974)

தகவல்: அன்பு மனைவி சீ.பாக்கியம்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### துரையப்பா பிரான்சீஸ் மைக்கல்



(சித்திரக்கலைஞர், ஞானசிருஷ்டி வைத்தியர், மைக்கா றேடியோ, படம் பிறோமிங் தொழிலக உரிமையாளர், கிளாலி புனித வியாகுல மாதா செபக்கூட நிறுவுநர்)

'துரையப்பா இல்லம்', இல27(11),கோயில் வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது இல. 99/8, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டவருமான துரையப்பா பிரான்சீஸ் மைக்கல் செவ் வாய்க்கிழமை 20.03.2007 இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான கலைஞர் (Artist & Block maker)சொலமன் பிரான்சீஸ் துரையப்பா-றோசலீன் தம்பதியரின் மூத்த அன்பு மகனும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை எலிசபெத்து மற்றும் திருமதி எற்வேட் திரேசம்மா, பிரான்சீஸ் சென்றோச்(துரை ஆரோக்கிய தாசன்), திருமதி அருள்நாயகம் பிலோமினா, திருமதி சீவரத்தினம் பார்பறா, அருட்சகோதரி மேரி மக்டலீன் பிரான்ஸீஸ் RGS(St. Bridget's convent, Colombo-07) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் திருமதி மைக்கல் செபமாலையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மைக்கல் மேரி றெயினா சரோயினிதேவி, மைக்கல் அருள்நேசன்(Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி அருள்நேசன் இராசாத்தியின் மாமனும் ஜெபநேசன், மயூரி ஆகி யோரின் பேரனும் திருமதி வரப்பிரகாசம் லூர்த்தம்மாவின் மைத் துனரும் காலஞ்சென்ற கி.மி.சூசைப்பிள்ளை முத்து தம்பதியரின் (கிளாலி) பாசமிகு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24.03.3007 சனிக்கிழமை காலை 8 மணிக்கு 'துரையப்பா இல்லத்தில்' இறுதி ஆராதனைக்கு வைக்கப்பட்டு அன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். சுண்டிக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதன் பின் யாழ். மரியன்னை பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், வியாகுலமாதா ஊழியரின் பக்தர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அமரர் மைக்கல் சமாதான ஒளியில் ஒளிர்வதாக"

'துரையப்பா இல்லம்'
இல. 27[11], கோயில் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (சி/50850)

தகவல்:
துரை ஆரோக்கியதாசன்
(சகோதரர் - முன்னாள் பிரதி அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org